சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

ரூ.3 கோடிக்கான ஜி.எஸ்.டி. வரி 18 சதவிகிதத்தை இனி அரசே ஏற்கும்!

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் மாநில சட்டமன்றம் உள்ளிட்ட மானியங்களில் பேசும்போது உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.3 கோடிக்கான ஜி.எஸ்.டி. வரி 18 சதவிகிதத்தை இனி அரசே ஏற்கும் என்று உறுப்பினர்களின் மேஜையைத் தட்டும் ஒலிக்கிடையே அறிவித்தார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் பேரவையில் அறிவித்த அறிவிப்பு வருமாறு:-

இங்கு காங்கிரஸ் உறுப்பினர் சந்திரசேகர் அவர்கள் உரையாற்றுகிபோது, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி உயர்வைப் பற்றிப் பேசியிருக்கிறார். அவர் மட்டுமல்ல; பலரும் இது குறித்து என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; மனுக்கள் மூலமாகவும் என்னிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, ஒரு தொகுதிக்கு ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மக்கள் நலப் பணிகளெல்லாம் நிறைவேற்றப் பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால், அதே நேரத்தில் ஜி.எஸ்.டி. வரி அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு, இந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகளின் மீது விதிக்கப்படும் 18 சதவீத வரித் தொகையும் இந்த நிதியிலிருந்தே கட்டப்படுவதால், தொகுதி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் பாதிக்கப்படுவதாக பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் கருத்திலே கொண்டு, இது குறித்து ஆராய்ந்து, வரி செலுத்துவதால் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், இந்த 18 சதவீத வரித் தொகையை தமிழ்நாடு அரசே ஏற்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறப்பு செயலாளர் சஜ்ஜன்சிங் சவான்ஆகியோர் 2025-2026-ஆம் ஆண்டிற்கான பொதுத் துறையின் ஆளுநர் மற்றும் அமைச்சரவை மானியக் கோரிக்கையையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

எதையும் போராடி பெற வேண்டிய அவசியமில்லை: அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தால்

கனிவோடு அதனை நிறைவேற்றித் தருகின்ற முதல்வரை நாம் பெற்றிருக்கிறோம்!

சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, சுற்றுச்சூழல், நிதித்துறை, ஆதிதிராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர் ஜெ. முகம்மது ஷா நவாஸ் பேசும் போது, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு போராடி போராடி பெற வேண்டும் என்று பேசினார்.

அப்போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு குறுக்கிட்டு பேசியதாவது:-

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு போராடி, போராடி பெற வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இப்போதெல்லாம் போராட வேண்டுமென்கிற ஒரு அவசியமே இல்லை. பொதுவாக, அரசு நேரடியாக அரசின் சார்பாக நடத்துகின்ற பள்ளி என்பது வேறு. தனியார் நடத்திக்கொண்டிருக்கின்ற பள்ளிகள் பிற்காலங்களில் மனு அளித்து, எங்களுக்கு உதவி பெறும் பள்ளிக்கூடம் தேவை. எங்களுக்கு சம்பளம் தாருங்கள். மாத, மாதம் அல்லது ஆண்டிற்கு ஒரு முறை நிர்வாகத்திற்கு பணம் தேவையென்று கோரிக்கை வைத்ததன் மூலமாகத்தான் நீண்ட நெடிய காலமாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவிற்கு, முதன்முதலாக அரசு நேரடியாக நடத்துகிற பள்ளிகளுக்கு வேண்டிய சலுகைகளை தருகிறார்கள். அதைத் தொடர்ந்து உதவிபெறும் பள்ளிகளை நடத்துகிற நிறைய Mission, அதாவது கிறித்துவ பள்ளிகள் நடைபெறுகிறது. இப்படி எத்தனையோ பள்ளிகள் நடைபெறுகின்றன. அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரும்போது, முதலமைச்சர் அவர்கள் கனிவோடு பார்வையில்தான் செய்துக் கொண்டிருக்கிறார். இப்போது கூட பார்த்தால், அரசு பள்ளிக்கூடங்களிலே காலைச் சிற்றுண்டி என்கிற அற்புதமான திட்டத்தை நிறைவேற்றினார்கள்.

தொடர்ந்து, தனியார் பள்ளிகள் நடத்திக் கொண்டிருக்கிறவர்களும் வேண்டுமென்று கேட்டவுடனே கனிவோடு அதையும் செய்துக் கொண்டிருக்கிறாரே யொழிய, போராடி பெற வேண்டிய அவசியம் இந்த ஆட்சியிலே இல்லை. அது அவருக்கே தெரியும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்து பேசினார்.

தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின்

வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்திடும் சட்ட முன் வடிவு!

சட்டப் பேரவையில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிமுகம் செய்தார்!

சென்னை, ஏப். 27 -

சட்டப் பேரவையில் நேற்று, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் - வலுக்கட்டாய நடவடிக்கைகளைத் தடுத்திடும் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்தார்.

இச் சட்ட முன்வடிவின், "நோக்கக் காரண விளக்கவுரை"யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பணக்கடன் வழங்குபவர்கள் மற்றும் அடகுக் கடைக்காரர்களின் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தி, கடனின் மீதான கடும் வட்டியிலிருந்து மக்களைக் காப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. 1943 ஆம் பணக் கடன் வழங்குபவர்கள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் XXVI/1957) மற்றும் 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கந்து வட்டி விதித்தல் தடைச்சட்டம் (தமிழ் நாடு சட்டம் 38/2003) ஆகியவற்றை அரசு இயற்றியுள்ளது. எனினும், சமீப காலமாக, சமூகத்தின் பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினர் குறிப்பாக விவசாயிகள், மகளிர், சுய உதவிக் குழுக்கள், விவசாய கூலித்தொழிலாளர்கள், பணியாளர்கள், நடைபாதை வியாபாரிகள், பால் பண்ணைத் தொழிலாளர்கள், கட்டிடப் பணியாளர்கள், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் ஆகியோர் எண்ம முறையில் வழங்கல் தளங்கள் உள்ளடங்கலாக பணக்கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் கவர்ச்சிகரமான கடன்களுக்கு அடிக்கடி இரையாகி, தாங்க இயலாத கடன் சுமைக்கு ஆட்படுகின்றனர். மேலும், பணக்கடன் வழங்கும் நிறுவனங்கள், ஏற்கனவே நிதிச் சுமையில் இருக்கும் கடன் பெற்றவர்களிடமிருந்து கடனை வசூலிப்பதற்கு முறையற்ற வழியை நாடுகின்றனர்; அது, துயரத்தில் இருக்கும் கடன் பெற்றவர்களை சில சமயங்களில் தற்கொலை செய்துகொள்வதற்கு தூண்டுதலாய் அமைந்து, அதன் மூலம் பலரின் குடும்பங்களை அழித்து சமூக ஒழுங்கை பாதிப்படையச் செய்கிறது.

எனவே, தனிநபர் அல்லது தனிநபர்கள் குழு, சுயஉதவிக் குழுக்கள் அல்லது கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் ஆகியவற்றிற்குக் கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின், வலுக்கட்டாய வசூலிப்பு முறையால் ஏற்படும் மிகுந்த இன்னல்களிலிருந்து பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்க ஒரு சட்ட வரையறைக்கு வகை செய்வது அவசியமென கருதப்படுகிறது. அதற்கிணங்க பணக்கடன் வழங்கும் நிறுவனங்களின் வலுக்கட்டாய நடவடிக்கைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு சட்டத்தை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

இவ்வாறு அந்த விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரோ முன்னாள் தலைவர்

கே.கஸ்தூரிரங்கன் மறைவிற்கு பேரவையில் இரங்கல் - புகழாரம்!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் நேற்று கூடியதும் இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.கஸ்தூரி ரங்கன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அப்போது பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் தீர்மானத்தில் இஸ்ரோ முன்னாள் தலைவர் முனைவர் கே. கஸ்தூரி ரங்கன் அவர்கள் 25.4.2025 அன்று மறைவுற்ற செய்தி றிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

விண்வெளி ஆய்வில் இந்தியா மிகப் பெரும் உயர்வை அடையவதற்கு, வித்திடும் வகையில் பணியாற்றிய முனைவர் கே. கஸ்தூரிரங்கன் அவர்கள் மிகச் சிறந்த அறிவியலாளராகத் திகழ்ந்து, திட்டக் குழு உறுப்பினர், டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக வேந்தர் உள்ளிட்ட பல உயரிய பொறுப்புகளை வகித்தவர். மேலும், 2003-2009-ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராக சிறப்புறப் பணியாற்றியவர். பத்மஸ்ரீ, பத்மபூஷன் மற்றும் பத்மவிபூஷன் ஆகிய உயரிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவினால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர், அறிவியலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டதும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநகராட்சி கலையரங்கத்தில் நேற்று (26.04.2025) திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவையொட்டி இரண்டு நாட்கள் நடைபெறும் கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சி, பேரணி மற்றும் பொது மாநாட்டை தொடங்கி வைத்து, விழாவில் தொடக்க உரையாற்றினார் திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார். உடன், திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப வீரபாண்டியன், மாவட்ட கழகச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, நவாஸ்கனி, மாநகராட்சி மேயர் ரங்கநாயகி, கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, கழக மகளிரணி பிரச்சாரக்குழு செயலாளர்உமா மகேஷ்வரி, கழக மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர்மாலதி நாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள

முதுநிலை மருத்துவப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!

சட்டப்பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளிக்கையில் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள முதுநிலை மருத்துவப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று தெரிவித்தார்.

நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு,

நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், திருக்கண்ணபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், கடந்த நிதியாண்டில் 15 ஆம் நிதிக்குழுவில், ரூ.1.20 கோடி மதிப்பில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் கட்டிடங்கள் கட்டுவதற்குரிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருமருகல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத்தான் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. மன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிற தேமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கூடுதல் கட்டிடங்கள் தேவைப்படின் ஆராய்ந்து, அறிந்து இந்த ஆண்டே நிதிநிலை மைக்கேற்ப கட்டிடங்கள் கட்டித் தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாகூர் அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, அறுவை அரங்கு கட்டிடம் ஒப்புதல் பெறும் நிலையில் ரூ.1.30 கோடி திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அந்த பணியும் நடைபெற விருக்கிறது. தற்போதும் கூட, நாகூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் ஒன்று ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்திருப்பதைப்போல, நாகப்பட்டினம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் MRB Vs. Non Service PG Counselling மூலம் காலிப்பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படும்.

வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

நாடு முழுவதிலும் உள்ள துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏறக்குறைய 4200 க்கும் மேற்பட்ட கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகை இல்லாத கட்டடங்களிலும் பழுதடைந்த நிலையிலும் இருக்கிறது. நிதியாதாரத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செய்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில் அவருடைய சட்டமன்றத் தொகுதியில் எந்தெந்த கட்டடங்கள் கட்டப்பட வேண்டுமென்பதை ஆராய்ந்தறிந்து, அதற்கேற்ற வகையில் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கேட்டிருக்கிறார். ஏறிகெனவே, நான் சொன்னதுதான். ஒன்றிய அமைச்சரிடத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைக்கும்பட்சத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சருடைய வழிகாட்டுதலைப் பெற்று, விதிமுறைகளுக்கேற்ப, மக்கள்தொகையின் அடிப்படையிலும், அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைந்துள்ள இடைவெளிக்கு ஏற்பவும், அமைத்துத் தருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

முதுநிலை மருத்துவர்களைப் பொறுத்தவரை, அவர்களை நியமிப்பதில் கடந்த ஓரிரு மாத காலமாக சற்று சட்டசிக்கல் இருந்தது. அதற்கு நேற்று முடிவு வந்திருக்கின்ற காரணத்தினால் நிச்சயம் வட்டார மருத்துவமனைகளைப் பொறுத்தவரை PG Counselling மூலம் காலிப் பணியிடங்கள் நிரப்பும் பணி விரைந்து நடைபெற விருக்கிறது என்பதை தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு

மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் நிலம் சம்பந்தமான வழக்கு ஒன்று அரசுக்கு சாதகமான தீர்ப்பு வந்திருக்கின்ற நிலையில், ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த தொகையை—ஏற்கெனவே நமக்கு வந்திருக்கின்ற அந்த நிலத்தில் கூடுதலாக கட்டடங்கள் கட்டுவதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதை தங்களின் வாயிலாக மன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய மருத்துவமான சித்தா, ஆயுர்வேதா, யோகா, யுனானி, ஹோமியோபதி போன்ற 5 பிரிவுகளிலும் காலியாக இருக்கிற 121 இடங்களை நிரப்பும் பணி தற்போது முடிவுற்று certificate verification, ranking, communal rotation போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 நாட்களில் அந்த பணிகள் முடிவுற்றவுடன் முதல்வர் அவர்களின் வாயிலாக அந்த 121 பணியிடங்களும் நிரப்பப்பட்டு உறுப்பினர் கோரியதைப்போல அவர் பகுதியிலிருக்கிற ஆயுர்வேத கல்லூரிக்கான காலி பணியிடங்கள் விரைந்து நிரப்பப்படும்.

இவ்வாறு உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலளித்தார்.